DEPOSITION OF WITNESS
(Chapter XXIII code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT,
(MAGISTRATE LEVEL), HOSUR.
C.C.No.422/2016 PW1

பெயர்: ஜெயா க/பெ.மஞ்சுநாத் த/பெ: திம்மைய்யா

ஊர்: பார்த்தகோட்டை தாலுக்கா: சூளகிரி

தொழில்: கூலிவேலை வயது:

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, on the day of 21.5.2019.

நான் தற்பொழுது தனியாக வசித்து வருகிறேன். மைக்ரோடெக்ஸ் என்ற நிறுவனத்தில் வீட்டு வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி என்னுடைய கணவர். எனக்கு தேன்கனிக்கோட்டையைச் சேர்ந்த சிவா என்பவருடன் சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு முதல் திருமணம் நடந்தது. திருமணம் ஆகி ஒரு ஆண்டிற்குப்பிறகு அவர் விபத்தில் இறந்துவிட்டார். அப்பொழுது நான் ராஜாஹவுன்ஸ் என்ற நிறுவனத்தில் கூலிவேலை செய்துவந்தேன். அப்பொழுது எதிரி அதேநிறுவனத்தில் கூலிவேலை செய்துவந்தார். அப்பொழுது எதிரி என்னிடம் என்னை விரும்புவதாகவும், என்னை திருமணம் செய்துகொள்ளவும் கேட்டார். அதன்பிறகு நாங்கள் இருவரும் 1 வருடமாக பழகிவந்தோம். அதன்பிறகு அம்சகிரி என்ற கிராமத்தில் உள்ள திம்மராஜ்சுவாமி என்ற கோவிலில் எனது அக்கா லட்சுமி, சித்தப்பா மகன் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் முன்னிலையில் எதிரியுடன் எனக்கு 2வதாக திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்கு பிறகு பத்தலப்பள்ளி என்ற ஊரில் நானும் எதிரியும் குடியிருந்து வந்தோம். 1 வருடத்திற்கு பிறகு பெண்குழந்தை பெயர் பிறந்தது, அதன் பெயர் துளசி தற்போது அக்குழந்தைக்கு 6 வயதாகிறது. அதன்பிறகு என்னை வேறுஒரு கணவருடன் இருந்ததாகவும், என்னை பிடிக்கவில்லை என்றும், குடித்துவிட்டு விட்டுவந்து என்னிடம் அடிக்கடி தகராறு செய்து நான் வேண்டாம் என்றும், வேறுஒரு திருமணம் செய்துகொள்ளப்போவதாகவும் தொல்லைசெய்து வந்தார். இவ்வாறு பலநேரங்களில் என்னை கொடுமைப்படுத்திவந்தார். தற்பொழுது அவர் பாரில் டிரைவராக உள்ளார். எதிரி எங்களை சரிவர பராமரிப்பதில்லை. நான் கற்ப்பமாக இருந்தபோதுகூட என்னை மேட்டில் இருந்து எதிரி என்னை கீழே தள்ளவிட்டர். அதனால் எனக்கு உடல்பலக்குறைவு ஏற்பட்டது.அதிலிருந்து எனக்கு சரிவரவேலைசெய்யமுடிவதில்லை.மேற்படி குழந்தை பிறக்கும்பொழுதே கால் வளர்ச்சியில்லாமல்தான் பிறந்தது. தற்பொழுது அக்குழந்தைக்கு அறுவைசிகிச்சை செய்துள்ளோம், அதைக்கூட எதிரிவந்து பார்க்கவில்லை, செலவுமுழுவதையும் நான்தான் பார்த்தேன். என்னை எதிரி அடித்து தொல்லைசெய்யும்போதெல்லாம் எனது சகோதரிவந்து கேட்பார். அவரிடமும் என்னை பிடிக்கவில்லை என்று சொல்லுவார், மேலும் எனது அக்காவையும் வீட்டிற்கு வரவேண்டாம் என்றும், அவரை நீயார் வீட்டிற்கு வருவது, வீட்டிற்கெல்லாம் வரக்கூடாது என்று தேவடியா, கண்டாரஓலி என்று என்னையும்

எனது அக்காவையும் அசிங்கமாக பேசினார். அதன்பிறகு எதிரியின் கொடுமை அதிகமாக இருந்ததால் நான் எனது அக்காவை அழைத்துக்கொண்டு ஒசூர் அனைத்து மகளிர் காவல்நிலையம் வந்து புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்த புகார்தான். அது அ.த.சா.ஆ.1 ஆகும். என்னுடைய மகளின் பிறப்புச் சான்றிதழ் தற்பொழுது இல்லை வீட்டில்உள்ளது அதனை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்வேன்.

மேற்படி ஆவணம் தாக்கல் செய்வதற்காக முதல் விசாரணை அரசு தரப்பு வழக்கறிஞர் அவர்களின் வேண்டுகோலின்பேரில் ஒத்திவைக்கப்படுகிறது.

/ஒம்/எஸ்.முனுசாமி,
குற்றவியல் நீதிபதி,
விரைவு நீதிமன்றம், ஒசூர்.